பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 20 புதன்கிழமை (6-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 10

## யாழ்ப்பாண நகரில்

# சிங்க கொடி ஏற்றும் நிகழ்ச்சி: தெற்கில் ஆரவாரம் இல்லை

## ஆனால் ஈழத் தமிழர் சீற்றம்

சாவகச்சேரி, டிசம்பர் 6

யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றியதை அடுத்து, அங்கு நேற்றுக் காலை கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை சிங்கக் கொடியை ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்ச்சி பற்றிய நேர்முக ஒளிபரப்பை ரூபவாஹினியும், ஒலிபரப்பை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் மேற்கொண்ட போதிலும் சிங்கக்கொடி ஏற்றும் வைபவம் தென்னிலங்கையில் எந்த ஆரவாரத்தையும் ஏற்படுத்தவில்லை என கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

*இதேவேளை ஈழத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை சிதைத்து, அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட சிங்கக் கொடியை சிங்கள ஆட்சியாளர் யாழ் நகரில் ஏற்றியிருப்பது ஈழத் தமிழர்களுக்கு ஆத்திரத்தையும் சீற்றத்தையும் ஊட்டியிருப்பதாக ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.*

''யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றிய நிகழ்ச்சியால் சிங்கள சமூகத்திடையே மகிழ்ச்சி — குதூகலம் வெடிக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களின் மனது மிகவும் புண்பட்டு இருப்பதாக தமிழ்த் தலைவர்கள் கூறுகின்றனர்' — என்று பி.பி.ஸி. அறிவித்தது.

இந்த நிகழ்ச்சி முக்கியமான ஒரு சம்பவம் என ஸ்ரீலங்கா அரசு கருதினாலும் 12 வருடப் போருக்கு இதனால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முற்றவெளியில் அனுருத்த சிங்கக் கொடி ஏற்றினார்

சாவகச்சேரி, டிச. 6

யாழ். முற்றவெளி, பழைய பிரதம தபால் கந்தோர், வீரசிங்கம் மண்டபம், றீகல் தியேட்டர் ஆகியவற்றுக்கு முன்பாக நேற்றுக் காலை பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் சிங்கக் கொடியை பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை ஏற்றினார்.

திரும்பிய புறம் எல்லாம் சீருடை தரித்த படையினர் அணி வகுத்து நிற்க, பெரும் கெடுபிடி ஏற்பாடுகளுடன் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

இராணுவத்தின் கொடியை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவும் —

கடற்படைக் கொடியை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகரவும் —

விமானப் படையின் கொடியை விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவும் —

பொலீஸ் கொடியை பொலிஸ்மா அதிபர் டபிள்யூ

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் 2 பாரிய முகாம்கள் மீதுபுலிகள் ஒரேசமயத்தில் தாக்குதல்

### யாழ். நகரில் சிங்கக் கொடி ஏற்றிய பின் சம்பவம்

கொழும்பு, டிச. 6

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்காப் படையினரின் இரு பாரிய முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் ஒரே சமபத்தில் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் அதிரடிப் படையினரில் ஒருவர் கொல்லப்பட்டார். ஐவர் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு நிரப்பப்பட்ட டிரக் வாகனம் ஒன்று முகாம் வாசலுக்கு ஓட்டிச் செல்லப்பட்டதாகவும் —

முகாம் வாசலில் காவலுக்கு நின்ற அதிரடிப் படை சிப்பாய்ஒருவர் அதனைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது டிரக்கில் இருந்த குண்டு வெடித்த தாகவும் சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

இந்த தாக்குதல் யாழ். நகரில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டு மூன்று மணித்தியாலங்களுக்குள் நடத்தப்பட்டிருப்பதாகவும் —

அகவே இத்தாக்குதல் நடத்தப்பட்ட [illegible] தெரிவித்தது. (இ)

## பிரான்ஸில் தமிழர் ஊர்வலம்

லண்டன், டிச. 6

ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து பிரான்ஸில் சுளும் என்னும் நகரில் கடந்த 2ஆம் திகதி நடத்தப்பட்ட ஊர்வலத்தில் 300க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

பாரிஸ் நகரிலிருந்து 800 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இந்தநகரத்தில்350தமிழர்கள் வரை வாழ்வது குறிப்பிடத்தக்கது.

(இ)

## செய்தியாளர் எவரும் அழைத்து வரப்படவில்லை

லண்டன், டிச. 6

யாழ்ப்பாணத்தில் நடந்த கொடியேற்று வைபவத்துக்கு செய்தியாளர்கள் எவரும் நேற்று அழைத்து வரப்படவில்லை.

ஆனாலும் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் கொடியேற்றம் தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டன என்று பி.பி.ஸி தெரிவித்தது. (இ-3)

## மண்மீட்பு போரில் இணைய துடிக்கும் இளைஞர்கள்

### வன்னியில் மட்டும் நேற்று 50 பேர்

சாவகச்சேரி, டிச. 6

யாழ். நகரில் ஸ்ரீலங்காப் படையினர் தமது தேசியக் கொடியை ஏற்றிய நிகழ்வானது இளம் சமுதாயத்தினரிடையே பாரிய மன மாற்றத்தினை ஏற்படுத்தி இருப்பதாகவும் —

இதனால் பெருமளவு இளைஞர்கள் தமிழீழப் பகுதிகளிலிருந்து விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளதாகவும் — ''புலிகளின் குரல்'' நேற்றுத் தெரிவித்தது.

வன்னிப் பகுதியில் இருந்து மட்டும் நேற்று 50 இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டனர் என்று மேலும் அது தெரிவித்தது.

இளம் சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றம் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு விரைவில் பேரிடி ஒன்றைக் கொடுக்கும் என அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## அனுருத்த ரத்வத்தையை கொலை செய்ய திட்டமாம்

கொழும்பு, டிச. 6

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் வகுத்திருந்த திட்டம் குறித்து இராணுவ உளவுப்பிரிவுக்குத் தகவல் கிடைத்திருப்பதாக 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அனுருத்த ரத்வத்தையைக் கொல்வதற்கு நான்கு புலிப் போராளிகள் ஏற்கனவே கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாகவும்.—

அனுருத்த ரத்வத்தையிடம் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை வழங்கும் போர்வையில் இந்தக் கொலையைச் செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும் 'லங்கா தீப' மேலும் தெரிவிக்கிறது.

இந்த நால்வர் குழுவுக்கும் தலைவராக ராஜேஸ் என்பவர் செயற்பட்டு வந்ததாகவும் —

இவர்கள் அனைவரும் நன்கு சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## திருமலையில் பொலீஸார் சுற்றிவளைத்து தேடுதல்

கொழும்பு, டிச. 6

திருமலை நகரில் திடீர் திடீரென சுற்றிவளைப்பு, தேடுல்களை நடத்தும் பொலீஸார் அங்கு வாழும் தமிழ் மக்களை வயது, பால் வேறுபாடின்றி கைது செய்து விசாரணைக்கென கூட்டிச் செல்கின்றனர்.

சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள பஸ்களில் வரும் பொலீஸார் அதனை குறித்த ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு தேடுதலில் ஈடுபடும் பொலீஸார் அப்பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழர்களை ஆண், பெண் வயது வேறுபாடின்றிக்கைது செய்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குமணபுறப்பாடு

வடமராட்சி, டிச 6

பொருள்கள் இறக்கி முடித்ததை தொடர்ந்து குமண கப்பல் நேற்று நண்பகல் பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்
## இளை நிலையம்
## சாவகச்சேரி

வாசகர்கள், விளம்பரதாரர்கள்
செய்தியாளர்களே!
உங்கள் வசதி கருதி
எங்கள் கிளை நிலையம்
சாவகச்சேரி நவீன சந்தை
மேல்மாடி 9 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது

★ செய்தி ★ விளம்பரம்
★ பத்திரிகை விநியோகம்

காலை 8. 30 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



## முக்கிய அறிவித்தல்
# "கணேக்ஸ்"
## நாடகப் பட்டறை
## (WORK SHOP)

நண்பர்களுக்கு,

உங்கள் அவசர அவசிய தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்காக காத்திருக்கின்றேன்.

**சி. ஜெயகணேஷன்**
பெரிய மாவடி, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

51-2-95 ]39340]



## விலை குறைப்பு

★ ஒரு கட்டி மில்க்வைற் நீல சோப் 27.00
★ அரை கட்டி மில்க்வைற் நீல சோப் 14.00

நீல சோப் மேலுறைகள், மில்க்வைற் நீல சோப், 72 கட்டி, 36 கட்டி, 50 அரைக் கட்டி பக்கெட் மேலுறைகளைச் சேகரிக்கவும்.

பரிசுத் திட்டம் அறிவிக்கப்படும்

தொடர்பு:
க. கனகராசா
மில்க்வைற்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(39467)



## தசாக, சபிண்டிகரண
# அழைப்பு

திருமதி
**பாலச்சந்திரசர்மா சகுந்தலாதேவி**
(மீனாக்ஷி)

தோற்றம்: 11-04-19953 மறைவு: 28-11-1995

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களின் கனிஷ்ட புத்திரியும், வரணியைச் சேர்ந்த பாலச்சந்திரசர்மாவின் மனைவியுமான சகுந்தலா தேவி (மீனாக்ஷி) 28-11-1995 அன்று காலமானார்.

அன்னாரின் தசாகக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

7-12-95 வியாழன் தசாகம்.
8-12-95 வெள்ளி புண்ணியாவாசனம், ஏகோதிஷ்டம்
9-12-95 சனி சபிண்டிகரணம், கிரகசாந்தி
10-12-95 ஞாயிறு சமாராதனை. கிரகயக்ஞம்

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

இங்ஙனம்:
**கணவர், பிள்ளைகள், பெறாமக்கள்**

தாயார்:- வை. பட்டம்மாள்
சகோதரிகள்:-
திருமதி ஜெயலக்ஷ்மி சிவசுப்பிரமணியக்குருக்கள்
(காரைநகர்)
திருமதி விஜயலக்ஷ்மி சிவசாமிஐயர்
(துளாயிற் பிள்ளையார் கோவில், திக்கம்)
பிரம்மஸ்ரீ சி. சிவசுப்பிரமணியக்குருக்கள்
(காரைநகர்)

(39466)


# வடபகுதியிலிருந்து கொழும்புக்கு செல்வோருக்கு புதிய கட்டுப்பாடு

## அரசின் புதிய கெடுபிடித் திட்டம்

கொழும்பு, டிச. 6
வடபகுதியிலிருந்து கொழும்புசெல்வோர் தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதன்படி —

தாண்டிக்குளம் ஊடாக வவுனியா சென்று அங்கிருந்து கொழும்பு சேல்வோர் அனைவரும் தாண்டிக்குளத்திலிருந்து வவுனியா ரயில் நிலையத்துக்குஅருகாமையில் உள்ள அகதி முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தங்கவைக்கப்படுவர்.

இவர்கள் கொழும்பிலே நிரந்தரமாக உள்ளவர்கள், தற்காலிகமாக வேறு வேலைகளுக்காக கொழும்பு செல்பவர்கள் என இரு பகுதிகளாக பிரிக்கப்படுவர்.

இதில் நிரந்தரமாக தங்குபவர்களின் முகவரிகள் பதியப்பட்டு அவர்கள் குறித்து கொழும்பில் உள்ள அவர்களது முகவரிகளில் உறுதி செய்தபின் — சுமார் மூன்று நாட்களுக்குள் — கொழும்பு செல்ல அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

தற்காலிகமாக கொழும்பு செல்வோரின் எண்ணிக்கை கணிசமாகச் சேர்ந்ததும் வவுனியா அகதி முகாமிலிருந்து அவர்களை பஸ்களிலோ, ரயிலிலோ படையினரே கூட்டிச் செல்வர். கொழும்பில் படையினரின் பாதுகாப்புடன் பாடசாலை ஒன்றில் இவர்கள் தங்க வைக்கப்படுவர். காலை 6 மணிக்கு இவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர். வெளியே செல்லும் போது செல்லும் இடம், விடயம் என்பனவற்றைப் பதிவு செய்த பின்னரே அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர்.

மாலையில் 6 மணிக்கு தாங்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளுக்கு அவர்கள் திரும்பி வந்து விடவேண்டும்.

இவ்வாறு தங்கவைக்கப்படுபவர்கள் கொழும்பில் தங்கள் அலுவல்கள் முடிவடைந்து விட்டன என்று தெரிவித்ததும் அவர்கள் தங்கியுள்ள பாடசாலைகளில் இருந்து படையினரால் அழைத்து வரப்பட்டு தாண்டிக்குளம் ஊடாக வடக்கு நோக்கி அனுப்பிவைக்கப்படுவர்.

— இதுவே அரசு தீட்டியுள்ள புதிய திட்டம் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-9)

## கலந்துரையாயல்

சாவகச்சேரி, டிச. 6
மக்கள் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் தொடர்பாளர்களுக்கான கலந்துரையாடல்ஒன்று நாளை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு அருகாமையில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

யாழ். கல்வி வலயம் இரண்டைச்சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்கள், விசேட கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிக் வரும்வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி புனித இருதயக்கல்லூரியில் நடைபெறவிருப்பதாக வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

இடம்பெயர்ந்த ப.நோ.கூ. சங்கங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் முகமாகப் பணிக்கப்பட்ட செயலணிக் குழுக்கள் ஒன்றையும், இரண்டையும் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் ஆகியோரை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவு அலுவலாத்தில் தன்னைச் சந்திக்குமாறு வடக்கு-கிழக்கு மகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. சுந்தரம்டிவகலாலா கேட்டுள்ளார். [உ]

## 1000 தொன் சீனியுடன் லங்கா கல்யாணி

சாவகச்சேரி, டிச. 6
நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா கல்யாணி'' கப்பல் இன்று பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் ஆயிரம் மெற்றிக்தொன் சீனி, 151 மெற்றிக்தொன் பருப்பு, 79 மெற்றிக்தொன் பயறு, 52 மெற்றிக்தொன் பால்மா, 903 மெற்றிக் தொன் அரிசி ஆகியன எடுத்து வரப்படுகின்றன. (இ-3-173)

## டாக்டர்களுக்கு உதவி

சாவகச்சேரி, டிச. 6
வன்னிப் பிரதேசத்திற்குச் செல்ல விரும்பும் அரச தனியார் வைத்தியர்களுக்கு நோயாளர் நலன்புரிச் சங்கம் தேவையான உதவிகளை வழங்கவிருப்பதாகவும் —

உதவிகளைப் பெறவிரும்பும் வைத்தியர்கள் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அடையாள அட்டைகள் விநியோகம்

சாவகச்சேரி, டிச. 6
வலிகாமம் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தோரின் புதிய அடையாள அட்டைகளில் ஒரு தொகுதி விநியோகத்திற்கு தயாராக உள்ளதாகவும்—

அவற்றை உரியவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் செயலக அடை [illegible] யாழ். செயலகம் அறிவித்துள்ளது. (உ)

## புதிய பங்கீட்டு அட்டைகள் இன்றுடன் வழங்கி முடிவு

சாவகச்சேரி, டிச. 6
வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி தென்மராட்சி பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கான உலர் உணவுப்பங்கீட்டு அட்டை இன்று புதன் கிழமைக்கு முன்பாக வழங்கி முடிக்கப்பட வேண்டும் என்று யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய அட்டைகளை விநியோகிக்கும் பணி ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் —

சிலபகுதிகளில் உள்ள கிராம சேவையாளர்கள் இந்தப் பணியை பூர்த்தி செய்யாத காரணத்தால் இன்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உலர் உணவுப் பங்கீட்டு அட்டை விநியோக முறையில் உள்ள சிக்கல்கள் குறித்து யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் வலய உதவி அரச அதிபர்களுடன் நேற்று முன் தினம் கலந்துரையாடினார். [இ-3]

## கொட்டகதெனிய நீக்கம் தொண்டமான் மகிழ்ச்சி

கொழும்பு, டிச. 6
கொழும்பு நகருக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய இடமாற்றம் செய்யப்பட்டது குறித்து அமைச்சர் தொண்டமான் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார் என 'திவயின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்மக்கள் வகைதொகையின்றிக் கொழும்பில் கைது செய்யப்பட்டது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மற்றும் பல தமிழ்க்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகவும் —

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் தமிழ் மக்களின் நோக்கங்களை அறிந்திருப்பார் என தான் நம்புவதாகவும் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், தான் தமிழருக்கு எதிராகச் செயற்பட்டதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்த குற்றச்சாட்டை பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய மறுத்துள்ளார்.

அப்படி ஏதாவது ஒரு சம்பவம் நிரூபிக்கப்பட்டால் தாம் சீருடையைக் களைந்து வீடு செல்லவும் தயார்என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பதிவாளருக்கு அழைப்பு

சாவகச்சேரி, டிச. 6
வலிகாமப், பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள மாவட்டப் பதிவக பணிமனைக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னதாக வர்து மேலதிக மாவட்டப் பதிவாளரை சந்திக்கும் படி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.


## அறிவித்தல்

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

காரைநகர் பல நோ. கூ. சங்கம் தனது கையிருப்பிலுள்ள சவர்க்காரவகைகளை அதனுடன் இணைக்கப்பட்ட பங்கீட்டு அட்டைக்கு ஒன்று ரூபா 15/- வீதம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை [8-12-95] பின் வரும் கிளைகள் மூலம் வழங்கவிருக்கின்றது.

1. கொடிகாமம் கிளை
2. கச்சாய் கிளை
3. நுணாவில் கிளை
4. மந்திகை கிளை

[39342] பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாயகப் பூமியை மீட்க அனைவரும் போராட்டத்தில் இணைய வேண்டும்

## வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 6

எமது தாயகப் பூமியை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் காளையரே கன்னியரே, ஆசிரியர்களே, அதிபர்களே ஒன்றிணைந்து முன்வாருங்கள்.

இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1972 இல் இருந்து வளர்ச்சியடைந்த ஆயுதப் போராட்டம் 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றத்துடன் முனைப்புப் பெற்றது. அன்று தொடக்கம் தமிழ் இனத்தின் கவசமாகவும், பலமான ஒரு சத்தியாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே விளங்கி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், மக்கள் ஆதரவு பெற்ற இயக்கமாக வளர்ச்சியடைந்து, எமது இனத்தையும் பாரம்பரிய நிலத்தையும் பாதுகாக்கும் வல்லமையுள்ள 'ஓர் அரசு' என்ற வடிவத்தைப் பெற்றது.

இக் கால கட்டத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகள், அழுத்தங்கள், அடக்குமுறைகள், பொருளாதாரத் தடைகள் என்பவற்றை மாறி மாறி வந்த ஸ்ரீலங்கா அரசுகள் ஏற்படுத்திய போதும், எமது தமிழ் மாணவர்களின் கல்வி, பண்பாட்டு வளர்ச்சியில் யாழ்ப்பாணக் கல்விச் சமூகமாகிய நாம் கூடிய கவனம் எடுத்து வந்துள்ளோம்.

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும், ஊக்குவிப்புக்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வழங்கிவந்தது.

ஒரு முனையில் போர் நடக்கும் வேளையில், ஏனைய பகுதிகளில் கல்வி கற்றல் — கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடந்தன. போராட்ட நடவடிக்கைகள் கல்வி கற்கும் உணர்வையும், உரிமையையும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

''எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே, எமது கல்வி வாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்'' என்று குறிப்பிட்டமைக்கமைய தமிழீழ மாணவர்களின் கல்வி, பண்பாட்டு மொழி மேம்பாட்டில் பல்வேறு முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றுள்:-

1) தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக கல்விவளர்ச்சிக் கழக ஆசிரியர்களை நியமித்தமை.

2) ஸ்ரீலங்கா அரசின் பொதுப் பரீட்சைகள் தமிழீழ பிரதேசத்தில் அடிக்கடி குண்டு வீச்சுகள், ஊரடங்குச் சட்டம் என்பவற்றால் குழப்பப்படுவதால் அதற்கான மாற்று ஏற்பாடாகவும், இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு ஊக்குவிப்புத் தேர்வாகவும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வையும் இளநிலை, முதனிலைத் தேர்வுகளையும் சிறப்பாக நடத்தி சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களுக்கு விருதுகள், பணப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தமை.

3). தமிழ் மாணவர்கள் சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றுத் திகழவேண்டுமென்ற நோக்கில், வருடா வருடம், அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வையும். தவணை ரீதியாக பொது அறிவுத் தேர்வுகளையும் நடத்தி பரிசுகள் வழங்கி ஊக்குவித்தமை.

4) எமது பிரதேச கல்லூரிகளுக்கு வேண்டிய ஆய்வுகூட வசதிகள், உபகரணங்கள், இரசாயனப் பொருள்களை வழங்க அரசு தடை விதித்த போதும், அறிவியல் கல்வியை வளர்க்கும் நோக்கில் மாணவர் அறிவியல் கழகத்தைத் தோற்றிவித்து அதனூடாக மாணவர்களின் விஞ்ஞானச் செயல்முறைக் கல்வியை ஊக்குவித்தமை.

5) அறிவியல் வினாடி வினா, அறிவியல் செயல்முறைப் போட்டிகள் என்பவற்றை மாணவர்களிடையே நடத்திப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி ஊக்குவித்தமை.

6) மாணவரிடையே விளையாட்டுத்துறை சார்ந்த ஆற்றலை வளர்ப்பதற்காக உடற்பயிற்சிப் போட்டிகளும், அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடத்திப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டமை.

7) தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகளை ஆண்டுதோறும் நடத்திச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அனைத்துப் போட்டிகளுக்குமான சிறப்புப் பரிசில்கள் தமிழீழ தேசியத் தலைவரினால் வழங்கப்பட்டமை.

-போன்றகல்விசார் மேம்பாட்டுச் செயற்பாடுகளைக் குறிப்பிடலாம். இவை தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த அளவுக்கு அக்கறையுடன் செயற்பட்டனர் என்பதையே காட்டுகின்றன.

ஆனால் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ அட்டூழியங்களினால் எமது பாடசாலைகள் அழிக்கப்பட்டன; கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும் கொல்லப்பட்டனர்.

குறிப்பாக ''முன்னோக்கிப் பாய்தல்'' ''டிரகன் பயர்,'' 'கைகுலுக்கல்,'' ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கைகளினால் எமது மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகளுக்கும், துயரங்களுக்கும் அளவில்லை.

இன்று யாழ்ப்பாண மண்ணில் எந்த ஒரு மாணவனாவது,ஆசிரியராவது உயிருடன் வாழமுடியாத ஓர் அவல நிலையை சிங்கள ஸ்ரீலங்கா அரசு தோற்றுவித்துள்ளது.

'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்பது போல், இந்த நிலையில் ''எமது மாணவர்களினதும் அதிபர்களினதும் உயிரா? கல்வியா?''முக்கியம் என்ற வினா எம்முன் எழுந்துள்ள வேளையில் எமது ஆசிரியர்களும், மாணவர்களும் உயிருடன் இருந்தாலேயே வளமான கல்வியைத் தொடரமுடியும் என்ற முடிவை எடுக்கவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்.

போர் மேகம் சூழ்ந்துள்ள எமது மண்ணில் வேர்கொண்டுள்ள சிங்கள இராணுவத்தை விரட்டியடிக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைய வேண்டிய ஒரு வரலாற்றுக் காலத்தில் நிற்கின்றோம்.

இந்த நிலையில் எமது மாணவர்களின் கல்வியில் ஒன்றோ இரண்டோ வருட தேக்கம் ஏற்படலாம். ஆனால் ஆற்றல் நிறைந்த எமது வளங்களின் மூலம், அந்த இடைவெளியை நிரப்பி மேலும் முனைப்பாக்கிச் செயற்பட்டு, புதிய வீறுகொண்ட ஒரு கல்விப் பரம்பரையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை கல்விச் சமூகத்தினராகிய எம்மிடம் உண்டு.

—இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(இ)

# வன்னியில் மருத்துவசேவை; விஸ்தரிக்க நடவடிக்கை

சாவகச்சேரி, டிச. 5

வன்னி பெரு நிலப்பரப்பில் பாடசாலைகளை உடனடியாக இயங்க வைப்பதற்கும்—

வைத்திய சேவைகளை அங்கு விஸ்தரிப்பதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவும், இடம் பெயர்ந்து சென்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான முன் நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று நேற்று இங்கிருந்து வன்னி சென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வன்னியின் ஏனைய இடங்களிலும் வீதிகளைச் செப்பனிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

# சிற்றிபேக்கரியும் சீனிச்சம்பலும்

நாகவிகாரையில் பூசை நடந்ததாம்.
'ரூபவாஹினி' சொல்லிற்று.
இனி என்ன?
'காமினி ரீ றூம்' கதவுகள் திறக்கும்.
'சிற்றி பேக்கரியும்'
சீனிச் சம்பலும்
நகரப் பகுதியில் அறிமுகமாகும்.
புத்தன் கோவிலுக்கு அத்திவாரம் போட
'ரத்வத்த' வரக் கூடும்.
சிங்கள மகாவித்தியாலயம் திரும்ப எழுமா?
எழலாம்.
வெசாக் கால வெளிச்சக் கூட்டை
எங்கே கட்டுவர்?
ஏன் இடமாயில்லை?
வீரமாகாளியின் வெள்ளரசிற் கடடலாம்.
முனியப்பர் கோவில் முன்றலிற் கட்டலாம்.
பெருமாள் கோயில் தேரிலும்;
பிள்ளையார் கோயில் மதிலிலும் கட்டலாம்.
எவர் போய் ஏனென்று கேட்பீர்?
முற்ற வெளியிற் 'தினகரன் விழாவும்'
காசிப்பிள்ளை அரங்கில் 'களியாட்ட
விழாவும்'
நடைபெறலாம்.
நாகவிகாரையிலிருந்து நயினாதீவுக்குப்
பாதயாத்திரை போகும்.
'பிரித்' ஓதும் சத்தம்
செம்மணி கடந்து வந்து செவி விழும்.
ஆரியகுளத்துத் தாமரைப் பூவுக்கு
அடித்தது யோகம்.
பீக்குளத்துப் பூக்களும் பூசைக்குப் போகும்.
நல்லூர் மணி துருப்பிடித்துப் போக
நாகவிகாரையில் மணியசையும்.
ஒரு மெழுகுவர்த்திக்காக...
புனித யாகப்பர் காத்துக் கிடக்க
ஆரியகுளத்தில் ஆயிரம் விளக்குகள் சுடரும்.
எம் இனத்தின் இளைய தலைமுறையே!
கண்திறக்காது கிடக்கின்றாய்.
பகைவனுன் வேரையும், விழுதையும்
வெட்டி
மொட்டை மரமாக்கி விட்டான்.
நீ நெட்டி முறிக்கக் கூடப் பலமற்று
நீள் துயிலிற் கிடக்கின்றாய்.
தேவாரப் பண்ணும்,
சங்கும், சேமக்கலமும் எங்கு போனது?
எங்காயினும் ஒரு மூலையிற் கிடக்கும்.
உன்னை உலுப்பியெழுப்பவும்
படுத்துக் கிடக்கின்றாய்.
திருவாதிரைக் காயினும் வருவாயா?
'எம்பாவாய் பாட' எம் ஊர்புகுவோம்.
ஊர்பிரிந்து வந்து ஒருமாதம் ஆயிற்று.
நகர்புகும் கழுகுகளைக் குதறிக்
குருவிகள் கொத்துகின்றன.
சுடுகாடான எம் வீதியெல்லாம்
சுதந்திரப்பண் பாடியபடி
'விடுதலைப் போராளி'களின் வீதியுலா.
என்ன நினைப்பில் இன்னும் இருக்கின்றாய்?
எம் இளைய தலை முறையே!
தோளிலிருப்பது சுடுகருவியா?
அட; கொட்டில் கட்டும் கிடுகும், தடியுமா?
நல்லது.
பனிக்குளிருக்குள்ளே முகம் காட்டாதே
தடிமல் வரும்
யாரோ சிலபேர் போரிடுவர்.
நீ பேசாமற்கிட.
ஊர் திரும்பும் ஒருகாலை விடியும்
அன்று.
நீயே முதலாளாய் வீதியில் இறங்கிச்
செம்மணிப் பக்கமாய் வறுக.
அது வரை
தும்மும், இருமும் தெருவில் இறங்காதே!
கொஞ்சம் புரண்டு படு.
காலிற் கறையான் ஏறிவிடும்.

— புதுவை இரத்தின துரை

# யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலர் மந்திகை செல்வதற்குத் தயக்கம்

## இருப்பிட,போக்குவரத்து வசதி இல்லை எனத் தெரிவிப்பு

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்கள் பலர் மத்திகையில் இயங்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமை ஆற்ற தயக்கம் காட்டுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்ற யாழ். போதனா வைத்தியசாலையை சேர்ந்த 54 சிற்றூழியர்களுக்கும் 123 ஏனைய தர ஊழியர்களுக்கும் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரால் இவர்களின் பெயர்ப்பட்டியலும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படிருந்தது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களை கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் பருத்தித்துறை வைத்தியசாலையில் கடமைக்குச் சமூகம் அளிக்கும்படி பணிக்கப்பட்டிருந்தது.

எனினும் மந்திகையில் கடமையாற்றுவதற்கு பணிக்கப்பட்ட ஊழியர்களில் பலர் போக்குவரத்து மற்றும் இருப்பிட வசதியீனங்களைக் காரணம் காட்டி மந்திகை செல்லத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

கடந்த 4 ஆம் திகதி இவர்கள் சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் ஒப்பமிடச் சென்ற போது அங்கு [illegible] கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

ஹொண்டா E M65 புதிய ஜெனரேற்றர், நாஷனல் G30 டெக் ஆகியன விற்பனைக்கு உண்டு. P. சிறீதரன் மாலி சந்தி, அல்வாய். (39454)

*இன்று வியாழ மாற்றம்*

எங்கும் விற்பனையாகின்றன இன்று காலை 10-30 மணியளவில் (9-03 நாடிக்கு) ராகு கேதுக்களும் பின்னிரவு 5-55 மணியளவில் (59-52 நாடிக்கு) குருவும் முறையே கன்னி, மீனம், தனு ராசிகளுக்கு மாற்றமடைகின்றன. (39328)

*இடமாற்றம்*

யாழ். நகரில் இயங்கி வந்த ஜெயா அழகு மாடம் தற்பொழுது கண்டி வீதி, சாவகச்சேரி (கோட் முன்பாக) இயங்குகின்றது என்பதை வியாபாரிகளுக்கு அறியத்தருகின்றேன். (39332)

*தவறிவிட்டது*

3-12-95 அன்று வல்லிபுர ஆழ்வார் கோயில் வீதியில் பொன்னுத்துரை காந்தரூபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல: 701200632 V) தபால் அலுவலக அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து மானிப்பாய் தபாலதிபருக்கு அனுப்பி வைக்கவும். (39455)

சோமசுந்தரம் மகேஸ்வரியின் 355140938 இலக்க தேசிய அடையாள அட்டை, வங்கி புத்தகம், கண்ணாடி ஆகியன 4-12-95 அன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் சாவகச்சேரி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கண்டி வீதியிலுள்ள கஸ்தூரி புடைவையகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (39463)

## ஊழியர் வசதி கருதி மினிபஸ் சேவை

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தில் பணி புரியும் ஊழியர்களின் வசதி கருதி மந்திகை—சாவகச்சேரி மினிபஸ் சேவை சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 7 மணியளவில் மந்திகையிலிருந்து சாவகச்சேரிக்கு புறப்பட்டுச் செல்லும் இந்த மினிபஸ் பிற்பகல் 4 மணியளவில் அங்கிருந்து மந்திகைக்கு திரும்பி வருகிறது.

சாவகச்சேரியில் யாழ். பிராந்திய சுகாதார திணைக்களம் இயங்கி வருவது குறிப்பிடுத்தக்கது. (இ-173)

## தமிழர் ஆசிரியர் சங்க முக்கிய கலந்துரையாடல்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1-30 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் சகல நிர்வாகிகளையும், சகல மாவட்ட நிர்வாகிகளையும், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரையும் கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் த.மகாசிவம் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

---

# இடமாற்றம்

## சேது களஞ்சியம்

யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் 28-12-1995 அன்று முதல் சாவகச்சேரி பழைய நீதிமன்றக் கட்டடத்துக்கு முன்பாக இயங்குகின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(39341)

# தேவை

நல்ல நிலையில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளி கருவிகள், மண்வெட்டிகள் என்பன தகுந்த விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

**த.பொ.மே. நிறுவனம்,**
**விவசாய/சூழல் பாதுகாப்பு பகுதி,**
**சாவகச்சேரி, கொடிகாமம்**
**வட்ட செயலகங்கள்.**

(39337)

# இடமாற்றம்

## ராசி சில்க்ஸ் (ராசி பட்டுச் சோலை)

யாழ். நவீன சந்தையில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை அன்புக்கினிய வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

(சி-3125)

# ஜீவாகாரம்

குழந்தைகளின் போஷாக்கை உறுதி செய்கிறது. இது குழந்தைகள் முதல் பெரியோர் வரை பாவிக்கக் கூடியது.

உடனடித் தேவைக்கு சீனியுடன் கலந்தும் பாவிக்கலாம்.

அண்ணா தொழிலகம்
ஐயா கடை சந்தி,
மீசாலை [சி/2906]

# தற்போதைய வதிவிடத்தை அறிய விரும்புகிறோம்

- ★ திரு. P. ராஜன் பூபாலசிங்கம்
- ★ சிவ கணேசன் பட்டுச்சோலை உரிமையாளர்
- ★ சிற்றி காமன்ஸ் (திருநெல்வேலி) உரிமையாளர்
- ★ சிவசம்பு களஞ்சியம் உரிமையாளர்
- ★ அதிபர்கள்: திரு. T. சந்தோசம் (வைத்தீஸ்வரா கல்லூரி), திருமதி S. செல்வரூபி [வேம்படி], திருமதி J. சரஸ்வதி (யாழ். இந்து மகளிர்), திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (இராமநாதன் கல்லூரி) ஆகியோர்
- ★ லேடன் புடைவை நிலைய உரிமையாளர்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை

(சி/3130)

# இடமாற்றம்

## ச. லிங்கநாதன் வண்ணச்சோலை (G.S. LINGANATHAN & CO.)

13, 14 பெரியகடை வீதி, யாழ். நகரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 20-11-1995 முதல் சாவகச்சேரி நவீனசந்தை உட்புறம் அமைந்துள்ள 19-ஆம் இலக்கக் கடையில் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத்தருவதில் மனமகிழ்ச்சியடைகிறோம்.

நிர்வாகம்
ச. லிங்கநாதன் வண்ணச்சோலை

(சி/ 3128)

---

# இடமாற்றம்

## வினோ நகைப் பூங்கா

(வீனஸ் தங்கமாளிகை)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது நிறுவனம் இன்றுமுதல் (06-12-1995) புதிய அங்காடிக் கட்டடம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள

**வினோ நகைப் பூங்கா**
**புதிய அங்காடிக் கட்டடம்,**
**பருத்தித்துறை வீதி,**
**கொடிகாமம்.**

(39464)

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(உரிமையாளர், அருள்முருகன் நகையகம், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம், சிவா நகைமாடம், யாழ் வீதி, சாவகச்சேரி)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 - 11 - 1936 | 4 - 12 - 1987 |

திதி; 6 - 12 - 1995

அலை கடல்புரள்வதும் ஆதவன் உதிப்பதும்
இயற்கை அன்னையின் ஈகைத் தத்துவமாகும்
உறுதியான நெஞ்சுடன் ஊக்கத்தின் இருப்பிடமாய்
எமையெல்லாம் காத்து நின்று ஏக்கத்தை
தவித்திரய்யா
ஐயா உன் திருவுருவம் ஒளிவீசும் பளிங்காமோ
ஆண்டு எட்டு சென்றாலும் ஆறாது உன் நினைவு.

எம் அன்புத் தெய்வமே தங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
மனமொழி மெய்களால் இறைஞ்சி நிற்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்
பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதி,
சாவகச்சேரி (39339)

# கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை ஆசிரியை
திருமதி. தனலட்சுமி நடராசா
அவர்களின் பாசமிகு அன்புக் கணவரான

## த. நடராசா

(முன்னாள் பிரதி அதிபர்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலையம்)

அவர்களின் மரணத்தையிட்டு எமது பாடசாலைச் சமூகம் தனது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகளைச் காணிக்கையாக்குகிறது.

மாணவர், ஆசிரியர், அதிபர்,
பெற்றோர், அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/கோண்டாவில் சி. சி. த. க. பா.

தகவல்:
திரு. இ. சிவபாதசேகரம் (அதிபர்)
C/o திருமதி க. சந்திரசேகரம்
முதலாங் கட்டை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (39465)

# கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் LION

## மா. கனகரத்தினம்

(இறைபதம் 4-12-95)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

லயன் கழகம்
சுன்னாகம்

(39338)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் துறைமுகத்துக்குள் புலிகள் தாக்குதல் நடத்தலாம்

## கடும் பாதுகாப்பு விதிகள் அமுல்

கொழும்பு, டிச 6

கொழும்புத் துறைமுகப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கடற்புலிப் பிரிவினர் தாக்குதல் நடத்தலாம் என அஞ்சப்படுவதால் —

கொழும்புத் துறைமுகம் மற்றும் அதைச் சூழவுள்ள கடல் பரதேசம் ஆகியவற்றுக்குள் எந்தக் கப்பல் நுழைவதானாலும் அல்லது வெளியேறுவதானாலும் அதற்கு ஸ்ரீலங்கா கடற்படையின் முன் அனுமதி பெற வேண்டும் என்று புதிய சட்டவிதி கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு கடந்த வாரம் வெளியிட்டிருக்கின்றது.

இத்த உத்தரவின் படி முகத்துவாரம் முதல் வெள்ளவத்தை வரையான ஐந்து மைல் தூர கடற்பிரதேசம் மற்றும் கொழும்புத் துறைமுகம் ஆகியவற்றுக்குள் நுழைவதற்கும் அல்லது வெளியேறுவதற்கும் முன்னர் சகல கப்பல்களும் ஸ்ரீலங்கா கடற்படையின் மேற்கு பிராந்திய கடற்படைப் பிரிவுத் தளபதியிடம் அனுமதி பெற வேண்டும்.

அதன்படி—

முகத்துவாரம் முதல் வெள்ளவத்தை வரையான கடல் பிரதேசத்தில் பயணம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தை ஒதுக்கி பொதுவாக 24 மணி நேரம்— ஒவ்வொரு கப்பலுக்கும் மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதி அனுமதி வழங்குவார்.

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள வழிகாட்டி (''பைலட்'') நிலையம் 16 ஆவது அலைவரிசையின் கீழ் கடற்படையுடன் தொடர்பு கொண்டு இத்தகைய அனுமதியை ஒவ்வொரு கப்பலும் பெற்றுக்கொள்ள உதவும்.

கடல் புலிகளின் தாக்குதல் இடம் பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதால்—

கொழும்பு — தூத்துக்குடி இடையே சேவையில் ஈடுபடும் அனைத்து வர்த்தகக் கப்பல்களையும் தாம் சேர வேண்டிய இடத்தை நெருங்கும் வரை ஸ்ரீலங்காவின் கரையிலிருந்து பெரும் தூரம் விலகிப் பயணம் செய்யும்படி ஸ்ரீலங்கா துறைமுக அதிகார சபை கேட்டிருக்கின்றது.

# “லங்கா முடித” கப்பல் மீண்டும் சேவையில்

சாவகச்சேரி, டிச. 6

வடபகுதி மக்களுக்கான பொருள்களை ஏற்றிவருவதில் சர்ச்சைக்குள்ளான ''லங்காமுடித'' கப்பல் மீண்டும் பருத்தித்துறைக்கு பொருள்கள் ஏற்றிவரும் பணியில் ஈடுபடவிருகிறது.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ள இக்கப்பலில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் ஏற்றப்படுவதாகவும் —

அடுத்த வாரம் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வரும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கென எடுத்துவரப்பட்ட உணவுப் பொருள்களுடன் படையினருக்கான பொருள்களும் முன்னர் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டதையடுத்து —

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவுக்கும், அரசுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

அதன்பின் இக்கப்பல் வடக்குக்கான பொருள்களை ஏற்றிவருவது நிறுத்தப்பட்டிருந்தது.

அதேவேளை — கொழும்பில் தரித்துள்ள மற்றொரு கப்பலான ''மாஹேறா'' கப்பலில் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய கோட்டாவான 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் எடுத்துவரப்பவிருக்கின்றது. (இ-3)

# வங்கி ஊடாக ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏற்பாடு

நவம்பர் மாதத்துக்கான ஓய்வூதியத்தை இதுவரை பெறாதவர்கள் இனி வங்கிகள் மூலமே அவற்றைப் பெறமுடியும் என்று செயலக ஓய்வூதிய பிரிவு கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் தெரிவித்தார்.

ஓய்வூதியம் பெறாத சகல ஓய்வூதியர்களின் வவுச்சர்களும், காசோலைகளும் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வெகுவிரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வங்கிகள் முழுமையாக செயற்பட ஆரம்பிக்காததால் செயலகத்தில் வைத்து ஓய்வூதியம் வழங்கப்பட்டாது தெரிந்ததே. (இ-3)

# நாளை செயலகத்தில் 104 பேருக்கு ஓய்வூதியம்

சாவகச்சேரி, டிச. 6

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் செயற்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு கருமபீடத்தில், கடந்த சனிக்கிழமை பெயர்களை பதிவு செய்த இலங்கை வங்கி ஆஸ்பத்திரி கிளையின் 104 ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை வியாழக்கிழமை வழங்கப் படவிருப்பதாக செயலக ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் தெரிவித்தார். (இ 3)

## இடம் பெயராதோருக்கு

# பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசியப் பொருள்

இடம் பெயராத குடும்பங்களுக்கு மா, சீனி ஆகியன பங்கீட்டு அடிப்படையில் ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலம் வழங்கப்படவிருக்கிறது.

3 பேருக்கு உட்பட்ட அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்களுக்கு 3 கிலோ மாவும் —

4 க்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கும் 5 கிலோ மாவும் — வழங்கப்படும்.

ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ சீனி 35 ரூபாப்படி வழங்கப்படவிருக்கிறது.

மா விநியோகம் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

சீனி விநியோகம் 'லங்கா கல்யாணி' யில் இருந்து சீனி இறக்கப்பட்டதும் ஆரம்பிக்கப்படும் என்றும் — யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

# பெயர் பதிய கோருகிறது சமூக மேம்பாட்டுப் பிரிவு

கைதடி நுணாவில் — தேவகி குடியிருப்பு, நாவற்குழி — சீலன் நகர் அப்பன் குடியிருப்பு, லவனிதா குடியிருப்பு ஆகியவற்றைச் சேர்ந்தோர் தங்கள் பெயர்களை சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள சாவகச்சேரி வட்டச் செயலகத்திலும் —

உரும்பிராய் — [illegible] யோகபுரம் அச்செழு — [illegible] காச்சிபுரம், ஆவரங்கால் மேற்கு— தந்திரிமலை, கோப்பாய் மத்தி — காந்திபுரம் சண்டிலிப்பாய் வடக்கு — கொம்பனிப்புலம், கோட்டைக்காடு ஆகியவற்றைச் சேர்ந்தோர் தங்கள் பெயர்களை நுணாவில் தெற்கு கண்டி வீதியில் அமைந்துள்ள செயலகத்திலும்— பதியுமாறு தென்மராட்சி, வலிகாமம் [illegible] சமூக [illegible] பிரிவினர் கோரியுள்ளனர். (இ)

## 'அன்ரனோவ்' அனர்த்தம்:

# மகனின் பிரிவு தாங்காது தந்தை தற்கொலை!

கொழும்பு, டிச. 6

ஊர்காவற்றுறைக் கடலில் ''அன்ரனோவ் — 32'' விமானம் வீழ்ந்து நொறுங்கிய சம்பவத்தில் இராணுவ லெப்டினன்ட்டான தனது மகனும் உயிரிழந்ததைத் தாங்க முடியாது தந்தையார் தற்கொலை செய்து கொண்டார்.

நீர்கொழும்புப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற — நீர்விநியோகப் பகுதி கண்காணிப்பாளரான — ஜேக்கப் லியனகே (வயது 56) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

தனது இளைய மகனான லெப்டினன்ட் பிரதீப் ஜயந்த லியனகே (வயது 27) விமானம் வீழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்ததைக் கேள்வியுற்று மிகவும் மனம் நொந்த நிலையில் இவர் இருந்தார் என்றும்—

மகனின் சடலம் கூட கிடைக்காததையிட்டு அடிக்கடி கவலை வெளியிட்ட அவர், மகனின் மரணம் தொடர்பான ஏழாம் நாள் கிரியைகளை முடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார் என்றும்—

பாலம் ஒன்றின் அருகே அவர் விழுந்து கிடப்பதைக் கேள்வியுற்று அவரது உறவினர்கள் அங்கு சென்று, அவரைப் பலவந்தப்படுத்தி வான் ஒன்றில் வீட்டுக்குக் கூட்டிவர முயன்றனர் என்றும் —

வான் நீர்கொழும்பு வாவி அருகில் ஒரு வளைவில் திரும்பிய போது, அவர் வானை விட்டு வாவிக்குள் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்றும் —

மரண விசாரனையில் கூறப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவரின் மூத்த மகன் மேஜர் ஹேமந்த லியனகே (வயது 32) திருமலை இராணுவ முகாமில் அதிகாரியாகப் பணிபுரிகின்றார்.

இராணுவத்திலிருந்து விலகுமாறு இரு பிள்ளைகளையும் தந்தையார் வற்புறுத்தி வந்ததாக உயிரிழந்தவரின் மனைவி திருமதி அனுலா லியனகே மரண விசாரணையின் போது தெரிவித்தார். (உ)

## இடம் பெயர்ந்த கூ. சங்கங்கள்

# மாலை 4 மணி வரைக்கும் திறந்திருக்க உத்தரவு

சாவகச்சேரி, டிச 6

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் இயங்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளும், அலுவலகங்களும் ஆகக் குறைந்தது காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை செயலாற்ற வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திரு. சுந்தரம் டிவகலாலா இவ்வாறு பணித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களில் பலரும் பிற்பகல் 2 மணிக்கே வேலைத்தலங்களை விட்டுச் சென்றுவிடுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே கூட்டுறவு ஆணையாளர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி ப. நோ கூ. சங்கங்கள் வழமையான வேலை நேரத்தைக் கடைபிடிக்க வேண்டும் —

இடம்பெயர்ந்த சங்கங்களுக்கான மேற் குறிப்பிட்ட வேலை நேரம் மறு அறிவித்தல் வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் — என்றும் கூட்டுறவு ஆணையாளர் தமது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

# உதயன்

## வெளியே சொல்லுங்கள்

★ தமிழ் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டு சென்று அமைதியாக வாழ வழிவிடும் வகையில் தமிழர் தாயகத்திலிருந்து ஆயுதப் படைகளை விலக்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு முன் முயற்சி எடுங்கள்.

★ தமிழர்களின் அரசியல் வேட்கைகளைத் திருப்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுங்கள்.

யாழ். பிரசைகள் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அண்மையில் அனுப்பிய மகஜரில் இவ்வாறு வேண்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தேசிய உரிமைகளையும், மனித உரிமைகளையும் ஸ்ரீலங்கா அரசு மீறி வருகிறது. நாட்டின் எந்தப் பகுதியிலும் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை. இதனைச் சர்வதேச சமூகம் கண்டும் காணாதது போல, வாய்மூடி மௌனியாக இருக்கமுடியாது— என்றும் அந்த மகஜரில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், அதனால் அது தமிழ்மக்களை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் ஐ. நா. செயலாளர் நாயகத்திற்கு விளக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் போர்ச் செய்திகளுக்குத் தணிக்கை விதித்துள்ளதோடு நிற்கவில்லை. வடக்கு-கிழக்கு மக்களின் அவலங்கள், அவர்கள் நாளாந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்தும் இருட்டடிப்புச் செய்து வருகிறது. அல்லது அவர்களின் சகல தேவைகளும் குறைவின்றி நிறைவேற்றப் படுவதாகவும், அவர்கள் நிறைந்த உரிமைகளை அனுபவிப்பதாகவும் பொய்ப்பிரசாரம் செய்கிறது. உலக நாடுகளும் நம்பிவிடுகின்றன.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வடக்கே வருவதற்குத் தடை விதிக்கப்பட்டதால் இங்கு நிலவும் உண்மையான நிலைமை வெளி உலகத்துக்குத் தெரிய வாய்ப்பில்லை.

ஆகையால் அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் இன்னல்களையும், மக்கள் படும் அவலங்களையும் வெளி உலகத்துக்கும், சர்வதேச மட்டத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கும் தலைவர்களுக்கும் எடுத்துக்கூறும் பொறுப்பு இங்குள்ள பொது மக்கள் அமைப்புகளையே சாரும்.

தமிழர்களின் இன்றைய அவலங்களுக்கான காரணங்கள், பின்னணி, பிரச்சினையின் அடிப்படை, மக்களுக்கு நேர்ந்த இன்னல்கள் என்பன உரிய தரவுகள், தகவல்களுடன் வெளியே அறிவிக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் செய்யும் பொய்ப் பிரசாரத்தை முறியடித்து உண்மையை உலகுக்கு எடுத்துச் சொல்வதில், புத்திஜீவிகள், கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் முன்னர் எப்போதும் உள்ளதை விட இப்போது மனதொன்றிய அக்கறை காட்டவேண்டும். அதில் தம்மை அதிக அளவில் ஈடுபடுத்தி உழைக்க வேண்டும். இதனைத் தமக்குள்ள தேசியப் பொறுப்பாகக் கருதி தமது சக்தியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகள் பலவற்றில் தமிழீழ மாவீரர் தினம்

லண்டன், டிச. 6

தமிழீழ மாவீரர் தினம் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் மக்கள் ஒன்று கூடி தமிழீழக் கொடியை ஏற்றியும் மாவீரர் சுடர் ஏற்றியும் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

மாவீரர் சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

அமெரிக்கா, கனடா, டென்மார்க், நோர்வே, சுவீடன், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி. இத்தாலி, மலேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நெதர்லாந்து, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் மாவீரர் தினம் எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் பலரும் உரை நிகழ்த்தினர்.

## வயிற்றோட்டம்; வயோதிபர் மரணம்

வடமராட்சி, டிச. 6

சுன்னாகத்திலிருந்து இடம் பெயர்ந்துமட்டுவிலில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் வயிற்றோட்டம் நோய் காரணமாக மரணமானார்.

சின்னத்தம்பி நாகேந்திரன் (78 வயது) என்பவரே மரண மானவராவார்.

இவர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர். (இ- 173)

---

## சிங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு வந்துவிட்டது என்று கருதமுடியாது எனவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.

குடாநாட்டின் முக்கால் வாசிப் பகுதி இன்னமும் விடுதலைப் புலிகளின கட்டுப் பாட்டில்தான் இருக்கிறது. பெருநிலப்பரப்பின் வடக்கிலும் பெருமளவு அவர்களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

பேச்சுவார்த்தை நடக்கும் ஏது நிலையை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கைப்பற்றப் பட்டது கூட அரசுக்கு முற்று முழுதான வெற்றி எனக் கூறி விடமுடியாது.

இராணுவம் யாழ்ப்பாணத் துக்கு வருவதற்கு முன்னரே முழு மக்களும் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

இனப்பிரச்சினைக்கு ஓர் உகந்த அரசியல் தீர்வு காணும் நிலையை வடக்கில் இராணுவம் பெற்றுள்ள வெற்றி மந்தமடையச் செய்யும் என்று தமிழர்கள் சந்தேகிக்கின்றனர் — என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (உ-3-6)

## காசோலையாக சம்பளம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களது இரண்டு மாதச் சம்பளப் பணம் காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சம்பளப் பணம் வழங்கப்படாமல் இருந்து வந்தது.

தற்பொழுது ஜுலை, ஒகஸ்ட், மாதங்களுக்குரிய சம்பளம் காசோலையாக வழங்கப்படுகிறது (இ-11)

## சந்தை இடம் மாற்றம்

மீசாலையில் பழைய ரயில் நிலையப் பகுதியில் இயங்கி வந்த பொதுச்சந்தை இன்று தொடக்கம் மீசாலை புதிய ரயில் நிலையத்திற்கு முன்பாக ஒதுக்கப்பட்ட இடத்தில் நடைபெறவுள்ளது. (இ-31)

---

## திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்காகக் கூட்டிச் செல்கின்றனர். விசாரணையின்போது இவர்கள் தாக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-31)

PolioPlus

ROTARY INTERNATIONAL

பெற்றோர்களே!

போலியோ பொல்லாதது

அது உங்கள் குழந்தையின் எதிர் காலத்தை பாழாக்கிவிடும்; பாலைவனமாக்கிவிடும்.

அந்த நோயிலிருந்து உங்கள் ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்.

போலியோ தடுப்பு சொட்டு மருந்து தவறாது கொடுங்கள்

டிச. 9 ஆம் திகதியை மறந்துவிடாதீர்கள்

# தென்மராட்சி பகுதியில் அதிக அளவு மரக்கறி பயிரிடக் கோரிக்கை

தென்மராட்சி, டிச. 6

தென்மராட்சிப் பகுதியில் அதிகளவு மரக்கறி, தானியம், கிழங்கு வகைகளை பயிரிடுமாறு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது தென்மராட்சிப் பகுதியில் மரக்கறி விலை அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் வாழ்க்கைச் சுமையினைத் தாங்கவேண்டியுள்ளதென்றும்—

இப்பகுதியில் உள்ள தரிசு நிலங்களிலும் விவசாயப் பயிர்களை பயிரிடுமாறும் அவர் கேட்டுள்ளார்

தற்போதைய சூழ்நிலையில் புகையிலை, வெங்காயம் போன்ற பயிர்களை அதிகளவு பயிரிடாமல் மரக்கறி, கீரை, கிழங்கு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை உற்பத்தி செய்யவேண்டும்.

தென்மராட்சிப் பகுதி மக்கள் ஏனைய பகுதி மக்களுக்கும் தமது காணிகளில் ஒரு பகுதியினை வழங்கி பயிர் செய்கைக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (இ-117)

## குழந்தைகள் நோயினால் பாதிப்பு

வடமராட்சி, டிச. 6

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் வயிற்றோட்டம், காய்ச்சல் போன்ற நோய்களால் குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. (இ-173)

---

## முற்றவெளியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வி. ராஜகுருவும் ஏற்றி வைத்தனர்.

நந்திக் கொடியை ஓய்வு பெற்ற மன்னார் உதவி அரச அதிபர் ரி. இராமலிங்கம் ஏற்றினார்.

கொல்லப்பட்ட படையினருக்காகவும், மக்களுக்காகவும் தொடர்ந்து இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப் பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

அதன் பின்னர் அங்குதிரண்டிருந்த படையினர் மத்தியில் கேணல் அனுருத்த உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

கடந்த 12 வருட காலமாகச் செய்யமுடியாத சாதனையை எமது படையினர் இப்போது புரிந்துள்ளனர்.

முன்னர் படையினருக்கு உரிய தலைமைத்துவமும், ஆயுத வசதியும் இல்லாதிருந்தது. எமது ஜனாதிபதி இப்போது அவற்றை வழங்கியிருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மக்களின் ஆணையை ஜனாதிபதி பெற்றார்.

முதலில் சமாதான வழியில் — பேச்சுவார்த்தை மூலம்— ஜனநாயக ரீதியில் தீர்வுக்கு அவர் முயன்றார். ஆனால் அது தோல்வியில் முடிவுற்றது.

ஆகவே மாற்று வழியாக இருந்த இராணுவ நடவடிக்கையை அவர் நாடவேண்டி ஏற்பட்டது.

இந்த நடவடிக்கை மூலம் — எமது சக்தி குறித்து — சர்வதேச ரீதியிலும், எமது நாட்டு மக்களிடையேயும் இருந்த தவறான கருத்தை நாம் பொய்யாக்கிவிட்டோம்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முதற்படியைத் தான் நாம்இப்போது எட்டியுள்ளோம். எமது போராட்டம் இன்னும் முடிவடையவில்லை.

இங்கு மக்கள் திரும்பி வந்து தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்கள் என நான் நம்புகிறேன் — என்றார்.

நிகழ்வின் முதலில் சமாதானத்தைக் குறிக்கும் வெள்ளைப் புறாக்களை பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் முப்படைத் தளபதி களும் பறக்கவிட்டனர். (உ-3-6)

## மழை இல்லாததால் பயிர்கள் கருகும் ஆபத்து

சாவகச்சேரி, டிச. 6

இவ்வருடம்பருவ மழை சீராக இல்லாதகாரணத்தால் தென்மராட்சிப்பகுதி வயல் நிலங்களில் நெற் பயிர்கள் கருகி விடும்நிலையில் இருந்து வருகின்றன

ஏற்கனவே பெய்த மழை நீர் தற்போதைய கடும் வெய்யிலால் வற்றிவிட்டது

அத்துடன் விவசாயத்துக்கு போதிய உர வகைகளும் இல்லாததால் இவ்வருடம் நெல்லின் விளைச்சல் மிகவும் குறைவானதாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் தற்போது விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் உர வகைகள் வழங்கப் பட்டுள்ளன ஆனாலும் வயல் நிலங்களில் நீர் இல்லாத காரணத்தால் உரத்தை விசிற முடியவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர். (இ-3)

## 5 ஆம் ஆண்டு பரீட்சையை நடத்துமாறு கோரிக்கை

### பரீட்சை ஆணையாளருக்கு கடிதம்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை வடபகுதியில் நடத்தவேண்டும், அதற்கு வேண்டிய சகல விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் எஸ். தில்லை நடராஜா பரீட்சை ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எதுவித அசம்பாவிதங்களுமின்றி பரீட்சையை நடத்த என்னால் உத்தரவாதம் வழங்க முடியும்.

பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகளை பரீட்சை நேரத்துக்கு மட்டும் வெளியேற்றிவிட்டு பரீட்சையை நடத்த முடியும்.

இடம் பெயர்ந்தவர்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சை எடுக்க வசதி செய்ய முடியும். எனவே புலமைப் பரிசில் பரீட்சையை வடக்கில் நடத்துங்கள்.

இந்தப் பரீட்சையானது குறிப்பிட்ட நேரத்தில் நடத்தப்படாதுபோனால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப் படும்.

இவ்வாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ-9)

## சாவகச்சேரியில் கண் கிளினிக்

### வாரம் 3 தினங்கள்

தென்மராட்சி, டிச. 6

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கண் கிளினிக் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தக் கிளினிக் மாற்றுஒழுங்குகள் செய்யப்படும் வரை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் யாழ். கண் சிகிச்சை நிபுணர்களால் நடத்தப்பட்டு வருகிறது. (இ-117)

## இரண்டாம் கட்டமாக மா நேற்று முதல் விநியோகம்

தென்மராட்சிப் பிரிவில் உள்ள நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு இரண்டாம் கட்ட மா விநியோகம் நேற்று முதல் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கிலோ ரூபா 12.20 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்று, இரண்டு, மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு 3 கிலோ வீதமும், நான்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ வீதமும் மா விநியோகிக்கப் படுகிறது.

தென்மராட்சிப் பகுதி மக்களுக்கான மா விநியோகம் முடிவுற்றதும் சீனி விநியோகம் ஆரம்பிக்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

## காங்கேசன் செல்ல மறுத்தோர் காலிக்கு

### பொலீஸாருக்கு தண்டனை

யாழ்ப்பாணம், டிச. 6

ஸ்ரீலங்கா பொலீஸில் கடமையாற்றிய 9 பொலீஸார் தண்டனைக்குரிய இடமாற்றமாக காலிக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொலீஸின் அத்தியட்சகர் பிரிவு 90 ஆம் ஆண்டு முதல் வவுனியாவில் இயங்கி வந்தது. அது கடந்த முதலாம் திகதி முதல் காங்கேசன் துறைக்கு மாற்றப்பட்டது.

இதன்படி அங்கே கடமையாற்றிய 7 தமிழ் பொலீஸாரும் 2 சிங்கள பொலீஸாரும் காங்கேசன் துறைக்கு செல்லுமாறு உத்தரவிடப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட 9 பொலீஸாரும் செல்ல மறுப்பு தெரிவித்துவிட்டனர்.

இதனை அடுத்தே இவர்களிற்கு தண்டனைக்குரிய இட மாற்றம் வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 6-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org